செ.வெ.எண்: 109 நாள்: 06.02.2020

**பள்ளி மாணவ, மாணவிகள் கொரோனா வைரஸ் குறித்து பொது மக்களிடையே போதிய விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்.**

**புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளியில் மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகளை வழங்கி மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் தகவல்.**

---

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளியில் பள்ளிக்கல்வித்துறையின் சார்பில் மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் இன்று (06.02.2020) வழங்கினார். இந்நிகழ்ச்சியில் அறந்தாங்கி சட்டமன்ற உறுப்பினர் திரு.இ.ஏ.இரத்தினசபாபதி அவர்கள் முன்னிலை வகித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் பேசியதாவது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழகத்தில் உள்ள பள்ளி மாணவ, மாணவிகளின் முன்னேற்றத்திற்காக பள்ளிக்கல்வித்துறையின் சார்பில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் கல்வி தரத்தை மேம்படுத்தும் வகையில் விலையில்லா மிதிவண்டி, மடிக்கணினி, பேருந்து பயண அட்டை போன்ற 14 வகையான கற்றல் உபகரணங்கள் விலையில்லாமல் வழங்கப்பட்டு வருகிறது.

அதனடிப்படையில் இன்றையதினம் அறந்தாங்கி அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளியில் 8 பள்ளிகளை சேர்ந்த 1,230 மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்கப்பட்டுள்ளது.

பள்ளி மாணவ, மாணவிகள் கொரோனா வைரஸ் குறித்து போதிய விழிப்புணர்வு பெறுவதுடன், ஒரு நாளைக்கு 15 முறை கை கழுவுதல், இருமல், தும்மலின் போது முகத்தை மூடிக் கொண்டு தும்முதல், தன் சுத்தம் பேணுதல் போன்ற முன்னெச்சரிக்கை தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். மேலும் பள்ளி மாணவ, மாணவிகள் கொரோனா வைரஸ் குறித்து பொது மக்களிடையே போதிய விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்.

புதுக்கோட்டை மாவட்ட மக்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் காவிரி கூட்டுக் குடிநீர் திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. அதே போன்று விவசாயிகள் பயன்பெறும் வகையில் காவிரி-குண்டாறு இணைப்புத்திட்டம் தொடங்கப்பட உள்ளது. இதன் மூலம் புதுக்கோட்டை மாவட்டத்தில் 17,000 ஹெக்டேர் பாசன வசதி பெறுவதுடன், இதில் அறந்தாங்கி பகுதியில் மட்டும் 10,000 ஹெக்டேர் நிலங்கள் பாசன வசதி பெறும்.

மேலும் தமிழக அரசு வழங்கும் இதுபோன்ற நலத்திட்ட உதவிகளை பள்ளி மாணவ, மாணவிகள் உரிய முறையில் பெற்று கல்வி பயின்று வாழ்வில் முன்னேற வேண்டும். இவ்வாறு மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் அறந்தாங்கி முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு.மு.இராஜநாயகம், மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் விஜயலெட்சுமி, மாவட்ட கல்வி அலுவலர் (பொ) கோவிந்தராஜ், வருவாய் கோட்டாட்சியர் குணசேகர், அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள் மற்றும் பள்ளி மாணவ, மாணவிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**